

Saidai Duraisamy's
**Manidhanaeyam Free IAS Academy**
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| வினாத்தொகுப்பு எண்: |
|---|
| |

பதிவு எண்: | | | | | | | | | | |

## TNPSC - தொகுதி - IV & VAO தேர்வு - இணைய வழி தொடர் மாதிரி தேர்வு
## இந்த வினாப்புத்தகம்
## பகுதி-அ (பொதுத் தமிழ்) உள்ளடக்கியது

**கால அளவு: ஒரு மணி நேரம் முப்பது நிமிடம்** **மொத்த மதிப்பெண்கள்: 150**

வினாக்களுக்கு பதிலளிக்கும் முன் கீழ்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்

### முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு, 100 வினாக்களைக் கொண்டுள்ளது.
3. விடையளிக்கத் தொடங்கும் முன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் பெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். வினா தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.
4. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
5. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
6. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால். உங்களுக்கு வழங்கப்படும். <u>விடைகளை குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.</u>
7. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் <u>கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால்</u> குறித்துக்காட்டவேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்க தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
8. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D), (E) என ஐந்து பதில்களைக் (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். உங்களுக்கு விடை தெரியவில்லை, எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்பவேண்டும். எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடைதான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
9. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். இவ்வினாத் தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
10. குறிப்புகள் எழுதி பார்ப்பதற்கு வினா தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும்.
11. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்ற தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

**[Turn over]**

Saidai Duraisamy's
**Manidhanaeyam Free IAS Academy**
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| Question Booklet No: |
| --- |
| |

Register Number: | | | | | | | | | | |

## TNPSC - Group - IV & VAO Exam - Online Test Series
## This Booklet Contains
## Part-A (Tamil Eligibility-Cum-Scoring Test)

**Duration: One Hour Thirty Minutes** **Total Marks : 150**

**Read the following instructions carefully before you begin to answer the questions**

## IMPORTANT INSTRUCTIONS

1. You will be supplied with this question booklet 15 minutes prior to the commencement of the examination.
2. This Question Booklet contains 100 questions.
3. Before answering the questions, you .shall check whether all the questions are printed serially and ensure that there are no blank pages in the question booklet. If any defect is noticed in the question booklet, it shall be reported to the invigilator within the first 10 minutes. and get it· replaced with a complete question booklet. If the defect is reported after the commencement of the examination, it will not be replaced.
4. Answer all the questions. All the questions carry equal marks.
5. You must write your Register Number in the space provided on the top right side of this page. Do not write anything else on the Question Booklet.
6. An answer sheet will be supplied to you separately by the room invigilator to shade the answers. Instructions regarding filling of answers etc., which are to be followed mandatorily, are provided in the answer sheet and in the mem"oranduin of admission (Hall Ticket).
7. You shall write and shade your question booklet number in the space provided on page one of the answer sheet with BLACK INK BALL POINT PEN. If you do not shade correctly or fail to shade the question booklet number, your answer sheet will be invalidated.
8. Each question comprises of five responses (answers) : i.e. (A), (B), (C), (D) and (E). You have to select ONLY ONE correct answer from (A) or (B) or (C) or (D) and shade the same in your answer sheet. If you feel that there are more than one 90rrect answer, shade the one which you consider the best. If you do not know the answer, you have to mandatorily shade (E). In any case, choose ONLY ONE answer for each question. If you shade more than one answer for a question, it will be treated as a wrong answer even if one of the given answers happens to be correct.
9. You should not remove or tear off any sheet from this Question Booklet.You are not allowed to take this Question Booklet and the Answer Sheet out of the Examination Room during the time of examination. After the examination. you must hand over your Answer Sheet to the Invigilator. You are allowed to take the Question Booklet with you only after the Examination is over.
10. You should not make any marking in the question booklet except in the sheets before the last page of the question booklet, which can be used for rough work. This should be strictly adhered to.
11. Failure to comply with any of the above instructions will render you liable for such action as the Commission may decide at their discretion.

[Turn over]

## பகுதி-அ - பொது தமிழ்

## Part-A- General Tamil

### 9 ஆம் வகுப்பு – பாடம் – 1, 2, 3

| | | | |
|---|---|---|---|
| வினாக்கள் | : 1 - 100 | மொத்த மதிப்பெண்கள் | : 150 |
| Questions | : 1 - 100 | Total Marks | : 150 |

1. பொருத்தமான துணைவியைக் காண்க.

மனிதனையும் விலங்குகளையும் (வேறு) ---- மொழியாகும்.

(A) வேறு
(B) வேறுபாடு
(C) வேறுபடுத்துவது
(D) வேறானது

2. கீழ்க்கண்ட கூற்றை கவனி:

1. இரண்டு கண்களைப் போல் இரண்டிரண்டு பூக்களை வைத்துத் தொடுக்கப்படும் மாலைக்குக் கண்ணி என்று பெயர்.
2. தமிழில் இரண்டிரண்டு அடிகள் கொண்ட எதுகையில் தொடுக்கப்படும் செய்யுள் வகை கண்ணி ஆகும்.
3. சிந்தாமணி – சிதறாத மணி
4. சிந்து – ஒரு வகை இசைப்பாடல்

மேற்கண்டவற்றில் சரியானது எது?

(A) 1 2 சரி
(B) 3 4 சரி
(C) 1 4 சரி
(D) அனைத்தும் சரி

3. தவறான இணை எது.

1. முத்திக்கனி – உருவகம்
2. தொழுது – பண்புத்தொகை
3. குற்றமில்லா – எதிர்மறைப் பெயரெச்சம்
4. செவிகள் உணவான – நான்காம் வேற்றுமைத்தொகை

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 3 மட்டும்
(D) 4 மட்டும்

4. பொருத்தமான வினையைக் காண்க.

கதிர் அலுவலகத்திலிருந்து விரைவாக -----

அவன் பையன் பள்ளியிலிருந்து இன்னும் ----

(A) வந்தான், வருகிறான்

(B) வந்துவிட்டான், விரவில்லை

(C) வந்தான், வருவான்

(D) வருவான், வரமாட்டான்

5. தவறான தொடர் எது?

(A) கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டு போகாது

(B) மெல்லப் பாயும் தண்ணீர் கல்லையும் கரைக்கும்

(C) வெந்நீர் தண்ணீர் ஆனாலும் நெருப்பை அணைக்கும்

(D) நெல்லுக்குப் பாய்கிற தண்ணீர் புல்லுக்குப் பாய்வது போல

6. "காதொளிரும் குண்டலமும் கைக்கு வளையாபதியும் கருணை மார்பின் மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடையில் மேகலையும் சிலம்பார் இன்ப"

(A) பாரதிதாசன்

(B) சுத்தானந்த பாரதியார்

(C) கவிமணி

(D) திரு.வி.க

7. கல்லும் மலையும் குதித்து வந்தேன் - பெருங் காடும் கொடியும் கடந்து வந்தேன் - என்ற பாடலைப் பாடியவர் யார்.

(A) நாமக்கல் கவிஞர்

(B) கவிமணி

(C) பாரதிதாசன்

(D) வாணிதாசன்

8. தவறானது எது?

(A) குமிழிக்கல் - Conical Stone

(B) நீர் மேலாண்மை – Water Resource

(C) பாசனத் தொழில்நுட்பம் - Irrigation Technology

(D) வெப்ப மண்டலம் - Tropical Zone

9. தவறான இணை எது.
   1. Software – மென்பொருள்
   2. Browser - உலவி
   3. Crop – உறை
   4. Cursor – ஏவி அல்லது சுட்டி
   5. Cyberspace - இணையம்
   6. Server – வையக விரிவு வலை
   7. Folder – உறை

   (A) 1 2 3
   (B) 4 5 6
   (C) 3 5
   (D) 2 4 6

10. பின்வருனவற்றுள் தவறான செய்தி.
   (A) அரிக்ககேடு அகழாய்வில் ரோமானிய நாணயங்கள் கிடைத்தன
   (B) புறப்பொருள் வெண்பாமாலை என்னும் இலக்கண நூலிலும் ஏறுகோள் குறித்து கூறப்பட்டுள்ளது.
   (C) எட்டு, பத்து ஆகிய எண்ணுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது
   (D) பட்டிமண்டபம் பற்றிய குறிப்பு மணிமேகலையில் காணப்படுகிறது.

11. நாவாய் என்ற தமிழ் சொல்லானது ஆங்கிலத்தில் ---- என மாறியுள்ளது.
   (A) நேவி
   (B) எறிதிரை
   (C) நீரியோஸ்
   (D) தோணீஸ்

12. தமிழ்நாட்டிற்குக் கடலில் எவ்வழியாக வரவேண்டும் என்று கூறும் கிரேக்க நூல்?
   (A) எறிதிரேசியன் ஆப் த சாப்போ
   (B) எறிதிரேசியன் ஆப் த பெரிபுலஸ்
   (C) எறிதிரேசியன் ஆப் த பாய்பட்டியோனா
   (D) எறிதிரேசியன் ஆப் த இளிகியா

13. “எழுந்தது துகள்,
   ஏற்றனர் மார்பு
   கவிழ்ந்தன மருப்பு
   கலங்கினர் பலர்” – என்ற ஏறுதழுவுதல் பற்றி கூறும் நூல்
   (A) புறநானூறு
   (B) மணிமேகலை
   (C) கலித்தொகை
   (D) சிலப்பதிகாரம்

14. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   1. இலியாத் காப்பியம் கி.பி. எட்டாம் நூற்றாண்டை சார்ந்தது.
   2. கிரேக்கத்தில் துன்பச் சுவையுடைய பாடல்கள் இளகியா என அழைக்கப்படுகிறது.
   3. தமிழ் இலக்கணங்களில் இளிவரல் என்பது துன்பச் சுவையினை சுட்டுகின்றன.
   4. கிரேக்கத்தில் வெண்பா வடிவப் பாடல்கள் சாப்போ என அழைக்கப்படுகின்றன.

   மேற்கண்டவற்றில் தவறானது எது.
   (A) 1 மட்டும்
   (B) 2 மட்டும்
   (C) 3 மட்டும்
   (D) 4 மட்டும்

15. நீறு எடுப்பவை, நிலம் சாடுபவை,
   மாறுஏற்றுச் சிலைப்பவை, மண்டிப் பாய்பவையாய்
   துளங்கு இமில் நல்ஏற்றினம் பலகளம்புகும்
   மள்ளர் வனப்பு ஒத்தன.
   (A) புறநானூறு
   (B) கலித்தொகை
   (C) பரிபாடல்
   (D) சிலப்பதிகாரம்

16. ஏறுகோள் - பற்றி கூறும் இலக்கியம், இலக்கண நூல்
   (A) மணிமேகலை, நேமிநாதம்
   (B) சிலப்பதிகாரம், புறப்பொருள் வெண்பாமாலை
   (C) சிலப்பதிகாரம், இலக்கண விளக்கம்
   (D) கலித்தொகை, பன்னிரு பாட்டியல்

17. "வசியும் வளனும் சுரக்க என வாழ்த்தி
   அணிவிழா அறைந்தனன் அகநகர் மருங்கென்" -
   இப்பாடல் வரியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
   (A) சினம்
   (B) குற்றம்
   (C) மன்றம்
   (D) மழை

18. பொருத்தமான பெயரடை.

------ விலங்கிடம் பழகாதே.

(A) பெரிய

(B) நல்ல

(C) இனிய

(D) கொடிய

19. எகிப்தில் உள்ள பெணி - ஹாசன் சித்திரங்களிலும், கீரிட் தீவிலுள்ள கினோஸஸ் என்னுமிடத்தில் உள்ள அரண்மனைச் சித்திரங்களிலும் ----- குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளன.

(A) திருக்குறள்

(B) சேவல்போர்

(C) தமிழ் பற்றி

(D) காளைப்போர்

20. தாழ்பூந்துறை – என்பதின் இலக்கணக் குறிப்பு

(A) உரிச்சொல்தொடர்

(B) வேற்றுமைத்தொகை

(C) வினைத்தொகை

(D) பண்புத்தொகை

21. சரியான இணை எத்தனை

1. உருபன் - Morpheme

2. ஒலியன் - Phoneme

3. ஒப்பிலக்கணம் - Comparative Grammar

4. பேரகராதி – Lexicon

(A) 0 இணை

(B) 1 இணை

(C) 2 இணை

(D) 4 இணை

22. தேனி மயிலாடும் பாறை அருகே சித்திரக்கல் புடவில் என்ற இடத்தில்------ ஓவியம் கண்டறிப்பட்டுள்ளது.
   (A) பாறை ஓவியம்
   (B) காளைபோர்
   (C) ஏறுதழுவுதல்
   (D) திமிலுடன் கூடிய காளை ஓவியம்

23. “விறகுநான் வண்டமிழே உன்னருள் வாய்ந்த
   பிறகுநான் வீணையாய் போனேன் - சிறகுநான்
   - என்ற பாடலை பாடியவர் யார்.
   (A) வைரமுத்து
   (B) வாலி
   (C) கண்ணதாசன்
   (D) நாஞ்சில் நாடன்

24. தமிழர்களின் பண்பாட்டுத் திருவிழாவாக விளங்கும் ஏறு தழுவுதல் ------- ஆண்டுகள் தொன்மையுடையது.
   (A) 1500
   (B) 1000
   (C) 2000
   (D) 2500

25. உலகில் மூவாயிரம் மொழிகள் ----- (பேசு)
   (A) பேசுகின்றனர்
   (B) பேசுகிறார்கள்
   (C) பேசப்படுகின்றன
   (D) பேசினார்கள்

26. ஏறுதழுவுதல் - திணை
   1. முல்லை நிலத்து மக்கள் - அடையாளம்
   2. முருத நிலத்து – வேளாண் குடி தொழில்
   3. பாலை நிலத்து – போக்குவரத்து
   மேற்கண்டவற்றில் சரியான இணை எத்தனை
   (A) 1 இணை
   (B) 2 இணை
   (C) 3 இணை
   (D) 0 இணை

27. வைதேகி நாளை நடைபெறும் கவியரங்கில் ---- (கலந்து கொள்)
   (A) கலந்து கொள்
   (B) கலந்து கொள்ளுவாள்
   (C) கலந்துகொள்ள வேண்டும்
   (D) கலந்து பேசு

28. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   வாக்கியம் 1- கூரிய கொம்புகளும் சிலிர்த்த திமில்களும் கொண்ட மூன்று எருதுகளைப் பலர் கூடி விரட்டுவது போன்ற பண்டைய ஓவியம் நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகேயுள்ள கரிக்கையூரில் காணப்படுகின்றன.
   வாக்கியம் 2- திமிலுடன் கூடிய காளையொன்றை ஒருவர் அடக்க முயல்வது போன்ற ஓவியம் மதுரை உசிலம்பட்டி அருகே கல்லூத்து மேட்டுப்பட்டியில் கண்டறிப்பட்டுள்ளது.
   (A) வாக்கியம் 1 சரி
   (B) வாக்கியம் 2 சரி
   (C) வாக்கியம் 1 2 சரி
   (D) வாக்கியம் 1 2 தவறு

29. தொடை நயங்களை காண்க.
   காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே!
   காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!
   (A) முரண், எதுகை, இரட்டைத்தொடை
   (B) இயையு, அளபெடை, செந்தொடை
   (C) எதுகை, மோனை, முரண்
   (D) எதுகை, மோனை, இயைபு

30. மேலைநாடுகளில் குறிப்பாக தேசிய விளையாட்டாகக் காளைச் சண்டையைக் கொண்டிருக்கும் நாடு எது?
   (A) இத்தாலி
   (B) இலங்கை
   (C) மலேசியா
   (D) ஸ்பெயின்

31. உலக தாய்மொழி நாள் -----
   (A) ஜனவரி 21
   (B) பிப்ரவரி 21
   (C) மார்ச் 21
   (D) ஏப்ரல் 21

32. சமயக் கணக்கரும் தந்துறை போகிய
அமயக் கணக்கரும் அகலா ராகிக் - என்ற மணிமேகலை என்பதின் பாடலில் அமயக்கணக்கர் என்பதின் சரியான பொருள் என்ன.
(A) சமய தத்துவவாதிகள்
(B) பல மொழி பேசும் மக்கள்
(C) சோதிடர்கள்
(D) ஐம்பெருங்குழு

33. "தெரிகின்ற பொருளிலெல்லாம் திகழ்ந்து நெஞ்சில்
தெவிட்டாத நுண்பாட்டே, தூய்மை ஊற்றே" – என்ற பாடல் வரியை இயற்றியவர் யார்.
(A) வாலி
(B) வைரமுத்து
(C) ம.லெ.தங்கப்பா
(D) கண்ணதாசன்

34. கால் முளைத்த கதைகள் - என்ற நூலின் ஆசிரியர் யார்?
(A) நாமக்கல் கவிஞர்
(B) நா.காமராசன்
(C) எஸ். இராதாகிருஷ்ணன்
(D) எஸ். இராமகிருஷ்ணன்

35. பொருத்துக.

| | |
|---|---|
| a. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் | - 1. மணவை முஸ்தபா |
| b. மொழிபெயர்ப்பு ஒலி பெயர்ப்பும் | - 2. என்.சொக்கன் |
| c. தமிழ்நடைக்கையேடு | - 3. ஜி.யு.போப் |
| d. மாணவர்க்கான தமிழ் | - 4. கால்டுவெல் |

(A) 4 3 2 1
(B) 1 2 3 4
(C) 2 1 4 3
(D) 4 1 3 2

36. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. காய்குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும்
2. ஒட்டிய சமயத்து உறுபொருள் வாதிகள் பட்டிமண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்
3. தேவரும் மக்களும் ஒத்துடன் திரிகளும்

நாலேழ் நாளினும் நன்கறிந்தீர் என

மேற்கண்ட பாடல் வரிகள் இடம் பெற்ற நூல்

(A) கம்பராமாயணம்
(B) திருவாசகம்
(C) சிலப்பதிகாரம்
(D) மணிமேகலை

37. "அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள் மண்ணுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டது இல் - என்ற பாடல் அடிகள் இடம் பெற்றுள்ள நூல்?

(A) புறநானூறு
(B) மணிமேகலை
(C) பெரியபுராணம்
(D) கலித்தொகை

38. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. தமிழ் மக்களின் வாழ்வியலைச் செல்லும் கருவூலங்கள் - சிலப்பதிகாரம், மணிமேகலை
2. சொற்சுவையும், பொருட்சுவையும் இயற்கை வருணனைகளும் நிறைந்தது – மணிமேகலை
3. பெண்மையை முதன்மைப்படுத்தும் புரட்சிக்காப்பியம் - மணிமேகலை
4. மணிமேகலை சமண சமயச் சார்ப்புடையது

மேற்கண்டவற்றில் தவறானது.

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 3 மட்டும்
(D) 4 மட்டும்

39. நீர் நிலைகள் தொடர்பான பெயர்களில் பொருந்தாதது எது.

(A) அகழி, ஆழிக்கிணறு, உறைக்கிணறு
(B) ஊருணி, அணை, ஏரி
(C) புலம், அம்பி, நாவாய்
(D) கண்மாய், கேணி, குளம்

40. தண்டமிழ் ஆசான், சாத்தன், நன்னூற்புலவன் என்று யாரைப் பாராட்டியனார்.

(A) சாத்தனார், இளங்கோவடிகளை

(B) இளங்கோவடிகள், சாத்தனாரை

(C) சாத்தனார், மாணிக்கவாசகரை

(D) இளங்கோவடிகள், திருதக்கதேவரை

41. “மழை உழவுக்கு உதவுகிறது. விதைத்த விதை ஆயிரமாகப் பெருகுகிறது. நிலமும் மரமும் உயிர்கள் நோயின்றி வாழவேண்டும் என்னும் நோக்கில் வளர்கின்றன” – என்று கூறியவர் யார்?

(A) புல்லங்காடனார்

(B) மாங்குடி மருதனார்

(C) மூவாதியார்

(D) மாறன் பொறையனார்

42. -------- யில் கண்டறியப்பட்டுள்ள முழுமையான வாழ்விடப்பகுதியும் செங்கல் கட்டுமானங்களும் இதரப்பொருள்களும் தமிழரின் உயரிய நாகரத்தை கண்முன் காட்டும் காட்சிகளாக அமைந்துள்ள.

(A) ஆதிச்சநல்லூர்

(B) கொடுமணல்

(C) கீழடி

(D) அரிக்கமேடு

43. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. அறிவை விரிவு செய் - ஔவையார்
2. 1863 ம் ஆண்டு இராபர்ட் புரூஸ்புட் என்னும் தொல்லியம் அறிஞர் சென்னை பல்லாவரம் செம்மண் மேட்டுபகுதியில் எலும்மையும் கற்கருவியும் கண்டுபிடித்தார்
3. முதல் கல் ஆயுதம் கண்டுபிடிப்பு – 1866 பல்லாவரம்
4. ரோமானியர்களின் பழங்காசுகள் கோவையில் கண்டெடுப்பு
5. 1914ம் அண்டு ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வில் முதுமக்கள் தாழிகள் கண்டெடுப்பு

மேற்கண்டற்றில் தவறானது

(A) 1 மட்டும்

(B) 2 மட்டும்

(C) 3 மட்டும்

(D) 4 மட்டும்

44. உறைகிணறு எங்கு தோண்டப்படுகிறது.

(A) மண் நிறைந்துள்ள பகுதி

(B) மணற்பாங்கான இடம்

(C) பாறைகளுக்கு இடையில்

(D) அணைக்கு அருகில்

45. தமிழக வரலாற்றில் பல நூற்றாண்டுகளுக்கு முன் ---- காலத்தில் கட்டப்பட்ட கல்லணையே விரிவான பாசனத் திட்டமாக இருந்தது?

(A) உதயஞ்சேரலாதன்

(B) இமயவர்மன்

(C) குலோத்துங்கன்

(D) கரிகாலன்

46. பட்டிமண்டபம் பற்றி கூறும் நூல்களில் சரியானது?

1. சிலப்பதிகாரம்
2. மணிமேகலை
3. திருவாசகம்
4. கம்பராமாயணம்

(A) 1 2

(B) 3 4

(C) 1 3 4

(D) அனைத்தும் சரி

47. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. கல்லணையின் நீளம் - 1080அடி
2. கல்லணையின் அகலம் - 15 முதல் 18 அடி
3. கல்லணையின் உயரம் - 40 முதல் 60 அடி

மேற்கண்டவற்றில் சரியானது எது.

(A) 1 மட்டும்

(B) 2 மட்டும்

(C) 3 மட்டும்

(D) அனைத்தும்

48. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. நாட்டின் சிறந்த அரண்களுள் நீருக்கே முதலிடம் - திருவள்ளுவர்
2. உணவெனப்படுவது நிலத்தோடு நீரே – புறநானூறு
3. இந்திய நீர்பாசனத்தின் தந்தை – ஜான் பென்னி குவிக்
4. முல்லை பெரியாறு அணையைக் கட்டியவர் - சர் ஆர்தர் காட்டன்
5. கிரண்ட் அணைகட்டு – கல்லணை
6. 1873 ம் ஆண்டு கோதாவரி ஆற்றின் குறுக்கே தௌலீஸ்வரம் அணை கட்டப்பட்டது.

மேற்கண்டவற்றில் சரியானது எது.

(A) 2, 4, 6
(B) 1, 3, 5
(C) 1, 2, 5, 6
(D) அனைத்தும் சரி

49. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. தமிழ் மரபில் நீரும் நீராடலும் வாழ்வியலோடு பிணைக்கப்பட்டவையாக விளங்குகின்றன – தொ. பரமசிவன்
2. குளிர்தல் என்பது குளித்தல் என்று ஆயிற்று – தொ.பரமசிவன்
3. குள்ளக் குளிரக் குடைந்து நீராடி – ஆண்டாள்
4. தெய்வச்சிலைகளைக் குளி(ர்)க்க வைப்பதை திருமஞ்சனம் ஆடல் என்று கூறுவர்.
5. திருமணமானபின் மஞ்சள் நீர் என்னும் வழக்கமும் தமிழகத்தில் நிலவுகிறது.

மேற்கண்டவற்றில் தவறானது.

(A) 1 மட்டும்
(B) 2, 3 மட்டும்
(C) 2, 5 மட்டும்
(D) 5 மட்டும்

50. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. சனி நீராடு என்பது ஔவையின் வாக்கு
2. சோழர் காலத்தில் - குமிழத்தூம்பு
3. நீரே உண்வாகவும் இருக்கிறது என்பதை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு திருக்குறளில் கூறியுள்ளார்.
4. மக்கள் பருகுநீர் உள்ள நீர்நிலை – ஊரணி

மேற்கண்டவற்றில் சரியானது எது.

(A) 1, 2
(B) 3, 4
(C) 1, 3
(D) அனைத்தும் சரி

51. சரியான இணை எத்தனை?

1. பலவகைக்கும் பயன்படும் நீர்த்தேக்கம் - இலஞ்சி
2. சிறியதாய் அமைந்த குளிக்கும் நீர்நிலை – குண்டம்
3. குளிப்பதற்கேற்ற சிறுகுளம் - குண்டு
4. உவர்மண் நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலை - கூவல்
5. தேக்கப்பட்ட பெரிய நீர்நிலை – சிறை

(A) 0 இணை
(B) 2 இணை
(C) 4 இணை
(D) 5 இணை

52. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்

(A) திசைச்சொற்கள்
(B) வடசொற்கள்
(C) உரிச்சொற்கள்
(D) தொகைச்சொற்கள்

53. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. பட்டிமண்டபத்துப் பாங்கு அறிந்து ஏறுமின் - சிலப்பதிகாரம்
2. பட்டிமண்டபம் ஏற்றினை, ஏற்றினை, எட்டினோடு இரண்டு அறியேனையே – கம்பராமாயணம்
3. பன்ன அரும் கலைதெரி பட்டிமண்டபப் - திருவாசகம்
4. மகத நன்நாட்டு வாள்வாய் வேந்தன் பகைப்புறிந்துக் கொடுத்த பட்டிமண்டபம் - மணிமேகலை

மேற்கண்டவற்றில் சரியானது எது.

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 3 மட்டும்
(D) எதுவுமில்லை

54. பொருந்தாதது.

(A) குந்த – உட்கார
(B) கந்தம் - உள்ளம்
(C) மிசை – மேல்
(D) வாசனம் - கவலை

55. வல்லினம் மிகும் இடங்கள் குறித்து சரியானது
   1. ஆறாம் வேற்றுமைத்தொகை
   2. திசைப்பெயர்கள்
   3. உவமைத்தொகையில்
   4. கு என்னும் நான்காம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்
   5. இருபெயரொட்டுப் பண்புத்தொகை

(A) 1 3 5
(B) 2 4 5
(C) 1 2 3
(D) அனைத்தும் சரி

56. காவிரியின் பாதையெல்லாம் பூவிரியும் கோலத்தை அழகாக விவரித்துரைக்கும் நூல் எது.

(A) சிலப்பதிகாரம்
(B) மணிமேகலை
(C) பெரியபுராணம்
(D) புறநானூறு

57. சொற்றொடர்களை முறைப்படுத்துக.
   a. ஏறுதழுவுதல் என்பதை
   b. தமிழ் அகராதி
   c. தழுவிப் பிடித்தல் என்கிறது.

(A) b a c
(B) b c a
(C) c b a
(D) c a b

58. பொருந்தாத சொல்லைக் கண்டறிக.

(A) கர்நாடகம்
(B) கேரளா
(C) இலங்கை
(D) ஆந்திரா

59. வரப்புயர நீர் உயரும், நீருயர நெல்உயரும், நெல்லுயரக் குடி உயரும், உயர்ந்த குடியாக, நாடெல்லாம் நீர் ---- நாடாக திகழ்கிறது.

(A) சேர
(B) சோழ
(C) பாண்டிய
(D) பல்லவ

60. தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன. -இது எவ்வகைத் தொடர்?

(A) வினாத்தொடர்

(B) கட்டளைத்தொடர்

(C) செய்தித்தொடர்

(D) உணர்ச்சித்தொடர்

61. பொருத்துக.

a. மா – தேன்

b. மது – முத்து

c. வாவி – வண்டு

d. தரளம் - பொய்கை

(A) 1 4 3 2

(B) 1 2 3 4

(C) 4 3 2 1

(D) 3 1 4 2

62. பொருத்துக.

a. நாளிகேரம் - அரசமரம்

b. கோளி – தென்னை

c. சாலம் - சந்தனமரம்

d. சந்து – ஆச்சாமரம்

e. நாகம் - ஆற்றுப்பூவரசு

f. காஞ்சி – நாகமரம்

g. இரும்போத்து – நாரத்தை

h. நரந்தம் - பருத்த பனைமரம்

(A) 1 2 3 4 5 6 7 8

(B) 8 7 6 5 4 3 2 1

(C) 2 1 4 3 6 5 8 7

(D) 2 1 4 3 5 8 6 7

63. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளை தென்னிந்திய மொழிகள் எனப் பெயரிட்டவர் யார்?

(A) கால்டுவெல்

(B) ஹோக்கன்

(C) பிரான்சிஸ் எல்லிஸ்

(D) ஈராஸ் பாதிரியார்

64. பொருத்துக.

a. கழை — சோலை
b. கா — குளக்கரை
c. அரும்பு — கரும்பு
d. கோடு — மலர்மொட்டு

(A) 1 2 3 4
(B) 4 3 2 1
(C) 2 1 4 3
(D) 3 1 4 2

65. இனம், சாதி, நாடு குறித்த எவ்வித அடையாளததையும் முன்னிலைப்படுத்தாத நூல் எது.

(A) நாலடியார்
(B) திருவாசகம்
(C) நாண்மணிக்கடிகை
(D) திருக்குறள்

66. கீழ்க்கண்ட கூற்றை கவனி

1. சுந்தரரின் திருத்தொண்டத்தொகை அடியவர் பெருமையை ஓர் அடியில் கூறுகிறது.
2. நம்பியாண்டார் நம்பியால் எழுதப்பட்டது திருத்தொண்டர் திருவந்தாதி
3. அறுபத்து மூவரின் சிறப்புகளை விளக்கி சேக்கிழார் பாடியது திருத்தொண்டர் புராணம்
4. சேக்கழார் கி.பி. 12ம்நூற்றாண்டைச் சேர்ந்தவர்
5. சேக்கழாரை பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ என்று இவரை மகாவித்துமான் மீனாட்சி சுந்தரனார் பாராட்டுகிறார்.

(A) 1 2 சரி
(B) 3 4 சரி
(C) 1 3 5 சரி
(D) அனைத்தும் சரி

67. "வானகமே, இளவெயிலே, மரச்செறிவே, நீங்களெல்லாம் கானலின் நீரோ? – வெறுங்காட்சிப் பிழைதானோ? - என்ற பாடலை பாடியவர் யார்.

(A) பாரதிதாசன்
(B) பாரதியார்
(C) திரு.வி.க.
(D) வாணிதாசன்

68. கனவிலும் இனிமை தராது யாருடைய நட்பு
(A) சொல்வேறு
(B) செயல்வேறு
(C) (B) மற்றும்(A)
(D) தீயவர்

69. திருக்குறளில் கோடி என்ற சொல் எத்தனை இடங்களில் இடம் பெற்றுள்ளது.
(A) 7
(B) 8
(C) 9
(D) 10

70. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை – என்ற குறளில் பயின்று வரும் அணி
(A) சொற்பொருள் பின்வருநிலையணி
(B) வேற்றுமை அணி
(C) உவமை அணி
(D) பொருள் பின்வருநிலையணி

71. திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு
(A) 1812
(B) 1815
(C) 1820
(D) 1825

72. வான் புட்கும் வடிநீண் மதில்,
மல்லல் மூதூர் வய வேந்தே – என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் எது.
(A) அகநானூறு
(B) புறநானூறு
(C) பெரியபுராணனம்
(D) மணிமேகலை

73. கீழ்க்கண்ட கூற்றை கவனி
கூற்று 1 – திருக்குறளுக்கு முதன் முதலில் உரை எழுதியவர் மணக்குடவர்
கூற்று 2 – திருக்குறளில் ஏழு என்ற சொல் ஏழு குறட்பாக்களில் இடம்பெற்றுள்ளது.
(A) கூற்று 1 2 சரி
(B) கூற்று 1 2 தவறு
(C) கூற்று 1 சரி 2 தவறு
(D) கூற்று 1 தவறு 2 சரி

74. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   1. திராவிட மொழிகளில் பொருள்களின் தன்மையை ஒட்டிப் பால்பாகுபாடு அமைந்துள்ளது.
   2. வடமொழியில் பால்பாகுபாடு அமையவில்லை
   3. ஆங்கிலம் போன்ற மொழிகளில் வினைச்சொற்கள் காலத்தை மட்டும் காட்டுமோ தவிர திணை, பால், எண் ஆகிய வேறுபாட்டைக் காட்டுவதில்லை
   4. திராவிட மொழிகளின் வினைச்சொற்கள் காலத்தைத் தெளிவாகக் காட்டுகின்றன.
   5. மலையாள மொழியில் திணை, பால், எண் ஆகிய வேறுபாட்டைக் காட்டுவதில்லை.

   மேற்கண்டவற்றில் சரியானது எது.
   (A) 1 2 3
   (B) 2 3 4
   (C) 1 3 5
   (D) அனைத்தும் சரி

75. பொருத்துக.
   a. அகழாய்வு - 1. Epigraphy
   b. கல்வெட்டியல் - 2. Embossed Sculpture
   c. புடைப்புச் சிற்பம் - 3. Excavation
   (A) 3 1 2
   (B) 1 2 3
   (C) 3 2 1
   (D) 1 3 2

76. திருக்குறளில் இடம்பெறும் ஒரே பழம் எது.
   (A) ஆரஞ்சு
   (B) கொய்யா
   (C) நெருஞ்சிப்பழம்
   (D) மாம்பழம்

77. பொருத்துக.
   a. அமையா – எண்ணும்மை
   b. நீரும் நிலமும் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
   c. அடுபோர் - வினையாலணையும் பெயர்
   d. கொடுத்தோர் - வினைத்தொகை
   (A) 1 2 3 4
   (B) 4 3 2 1
   (C) 2 1 4 3
   (D) 3 4 1 2

78. சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்
கலத்துநீர் பெய்திரீஇ யற்று – என்ற குறளில் பயின்று வரும் அணி
(A) உருவக அணி
(B) உவமையணி
(C) வேற்றுமை அணி
(D) தற்குறிப்பேற்ற அணி

79. வணக்கம் வள்ளுவ என்னும் கவிதை நூலுக்கு ---- ம் ஆண்டு சாகித்திய அகாடமி விருது வழங்கப்பட்டது.
(A) 2000
(B) 2002
(C) 2004
(D) 2006

80. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரோ
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
என்ற புறநானூற்று பாடலைப் பாடியவர் யார்?
(A) கனியன் பூங்குன்றனார்
(B) குடபுலவியனார்
(C) பொன்முடியார்
(D) ஆரியபடை கடந்த நெடுஞ்செழியன்

81. திருக்குறள் மூலத்தை முதன்முதலில் அச்சிட்டவர் யார்.
(A) தஞ்சை ஞானபிரகாசர்
(B) ராஜன்
(C) இராசமாணிக்கனார்
(D) தட்சிணமூர்த்தி

82. கீழ்க்கண்ட கூற்றை கவனி
1. இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும் - பிங்கல நிகண்டு
2. உலக தாய்மொழி நாள் - பிப்ரவரி 21
3. தமிழை ஆட்சி மொழியாகக் கொண்ட நாடுகள் - இலங்கை, சிங்கப்பூர்
4. யாமறிந்த மொழிகளிலே தமிமொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம் - பாரதிதாசன்
மேற்கண்டவற்றில் தவறானது எது.
(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 3 மட்டும்
(D) 4 மட்டும்

83. புறநானூற்றில் இடம்பெற்ற பாடல் வரிகளில் தவறானது எது.
   1. யாதும் ஊரே யாவரும் கேளிர்
   2. சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
   3. உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
   4. உளம்தொட்டு உழுவயல் ஆக்கி
   (A) 1 மட்டும்
   (B) 2 மட்டும்
   (C) 3 மட்டும்
   (D) 4 மட்டும்

84. “சித்தர் மரபிலே தீதறுக்கும் - புதுச்
   சிந்தனை வீச்சுகள் பாய்ந்தனவே”
   என்ற பாடலைப் பாடியவர் யார்.
   (A) கந்தர்வன்
   (B) வைரமுத்து
   (C) தமிழ்ஒளி
   (D) ஈரோடு தமிழன்பன்

85. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   1. பண்டைய வேந்தர்களின் வீரம், வெற்றி, கொடை குறித்தும் குறுநில மன்னர்கள், புலவர்கள் சான்றோர்கள் உள்ளிட்டவர்களின் பெருமைகளை பற்றியது.
   2. பண்டைய கால மக்களின் புறவாழ்க்கையை பற்றி கூறும் நூல்
   3. பண்டையத் தமிழர்களின் அரிய வரலாற்றுச் செய்திகள் அடங்கிய பண்பாட்டுக் கருவூலமாகத் திகழ்கிறது.
   மேற்கண்ட வாக்கியங்களுடன் தொடர்புடைய நூல்
   (A) பரிபாடல்
   (B) பதிற்றுப்பத்து
   (C) புறநானூறு
   (D) அகநானூறு

86. தமிழ்விடுதூது கூறும் பொதுவானவைக் கொண்டு பொருத்து.

| | | |
|---|---|---|
| a. பாவினம் | - | 1. 3 |
| b. வண்ணம் | - | 2. 6 |
| c. சுவை | - | 3. 5 |
| d. அழகு | - | 4. 1 |

   (A) 1 2 3 4
   (B) 4 3 2 1
   (C) 2 1 4 3
   (D) 1 3 2 4

87. செருக்கினால் துன்பம் தந்தவரை நம்முடைய ----- ஆல் வெல்ல வேண்டும்.
(A) பொறுமை
(B) பொறாமை
(C) அறிவால்
(D) அன்பால்

88. திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து அறனல்ல ----- நன்று
(A) எய்யாமை
(B) செய்யாமை
(C) இயலாமை
(D) பொறுத்தல்

89. தமிழ்விடுதூது

| | | |
|---|---|---|
| a. குணம் | - | 1. 100 |
| b. வண்ணம் | - | 2. 10 |
| c. சுவை | - | 3. 8 |
| d. அழகு | - | 4. 9 |

(A) 1 2 3 4
(B) 4 3 2 1
(C) 2 1 4 3
(D) 3 2 1 4

90. கந்தர்வன் என்னும் நாகலிங்கம் அவர்கள் எழுதிய சிறுகதைத் தொகுப்புகளில் பொருந்தாதது எது.
1. சாசனம்
2. தண்ணீர் தண்ணீர்
3. ஒவ்வொருகல்லாய்
4. தண்ணீர் தேசம்
5. கொம்பன்
6. வாய்க்கால் மீன்கள்
7. தண்ணீர்

(A) 1 2 3
(B) 4 5 6 7
(C) 1 3 5 7
(D) 2 4 6

91. நுட்பமான ----- அடக்கமான சொற்களைப் பேசுவது அரிது.
(A) கேள்வியறிவு இல்லாதவர்
(B) பட்டறிவு இல்லாதவர்
(C) பகட்டறிவு இல்லாதவர்
(D) கேள்வியறிவு இல்லாதவர்

92. தவறான பொருத்தம் எது.
   1. சத்துவம் - போர், தீவிரமான செயல்களை குறிக்கும் குணம்
   2. இராசசம் - சோம்பல், தாழ்மை போன்றவற்றை குறிக்கும் குணம்
   3. தாமசம் - அமைதி, மேன்மை ஆகியவற்றைக் சுட்டும் குணம்

(A) 1 மட்டும்
(B) 2 மட்டும்
(C) 3 மட்டும்
(D) 1 2 3

93. கீழ்க்கண்ட கூற்றை கவனி
   1. துணைவினை திணை, பால், இடம், காலம் காட்டும் விகுதிகளைப் பெறும்.
   2. தமிழில் ஏறத்தாழ 42 துணைவினைகள் உள்ளன.

(A) 1 மட்டும் சரி
(B) 2 மட்டும் சரி
(C) இரண்டும் சரி
(D) இரண்டும் தவறு

94. இந்தியாவில் உள்ள நான்கு மொழிக் குடும்பங்களில் தவறானது எது?

(A) இந்தோ ஆரிய மொழிகள்
(B) இந்தோ ஆசிய மொழிகள்
(C) ஆஸ்திரோ ஆசிய மொழிகள்
(D) சீன திபெத்திய மொழிகள்

95. இராமசரிதம் என்ற இலக்கிய நூல் மலையாளத்தில் இயற்றப்பட்ட நூற்றாண்டு

(A) பொ.ஆ 10 ம் நூற்றாண்டு
(B) பொ.ஆ 11 ம் நூற்றாண்டு
(C) பொ.ஆ 12 ம் நூற்றாண்டு
(D) பொ.ஆ 13 ம் நூற்றாண்டு

96. கீழ்க்கண்ட கூற்றை கவனி

கூற்று 1 : செய்பவரை முதன்மைப் படுத்தும் வினை செய்வினையாகும்

கூற்று 2 : பகுபத உறுப்புகளுள் அடங்காமல் பகுதி, விகுதிக்கு நடுவில் காலத்தை உணர்த்தாமல் வரும் மெய்யெழுத்து எழுத்துபேறு எனப்படும்.

(A) கூற்று 1 மற்றும் 2 சரி
(B) கூற்று 1 மற்றும் 2 தவறு
(C) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
(D) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

97. கீழ்க்கண்ட கூற்றை கவனி

கூற்று 1 : பாண்டிய மண்டலத்தில் ஏரியைக் கண்மாய் என்று அழைப்பார்கள்

கூற்று 2 : மக்கள் பருகுநீர் உள்ள நீர்நிலைக்கு ஊரணி என்று பெயர்.

(A) கூற்று 1 மற்றும் 2 சரி

(B) கூற்று 1 மற்றும் 2 தவறு

(C) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

(D) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

98. 'நீரும் நிலமும் புணரியோர், ஈண்டு உடம்பும் உயிரும் படைத்திசினோரே' என்ற புறநானூற்றுப் பாடலின் இடம்பெற்றுள்ள திணை மற்றும் துறையைக் குறிப்பிடுக

(A) பொதுவியல், பொருண்மொழிக்காஞ்சி

(B) வெட்சி, நற்றாய்கூற்று

(C) கரந்தை, இயன்மொழித்துறை

(D) நொச்சி, செலவழுங்குதல்

99. கீழ்க்கண்ட கூற்றை கவனி

கூற்று 1: பகுபதமாக உள்ள வினையடிகளைக் கூட்டுவினை என்பர்

கூற்று 2 : கூட்டுவினைகள் மூன்று வகைப்படும்

(A) கூற்று 1 மற்றும் 2 சரி

(B) கூற்று 1 மற்றும் 2 தவறு

(C) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

(D) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

100. சரியான குறளைத் தேர்ந்தெடு.

(A) தீய தீயவை பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்

(B) தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்

(C) தீயினும் தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்

(D) தீய தியினும் பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்

******